# அறிக்கையிடத்தக்க நடத்தை திட்டத்தின் அறிமுகம்

## புகாரளிக்கும் நடத்தை திட்டம் பற்றி

சில நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்கள் அல்லது தன்னார்வலர்கள் பற்றிய சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் குழந்தை தொடர்பான முறைகேடு குறித்த குற்றச்சாட்டுகளை குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்க வேண்டும் என விக்டோரியன் அறிக்கையிடத்தக்க நடத்தை திட்டம் கோருகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் குழந்தை தொடர்பான தவறான நடத்தை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு நிறுவனங்கள் எவ்வாறு பதிலளிக்கின்றன என்பதை மேம்படுத்துவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

திட்டத்தின் கீழ்:

- நிறுவனங்களின் தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு எதிரான குழந்தை தொடர்பான தவறான நடத்தை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு நிறுவனங்கள் பதிலளிக்க வேண்டும்
- குற்றச்சாட்டுகள் குறித்து நிறுவனங்கள் ஆணைக்குழுவிடம் சொல்ல வேண்டும்
- நிறுவனங்கள் எவ்வாறு பதிலளிக்கின்றன மற்றும் குற்றச்சாட்டுகளை விசாரிக்கின்றன என்பதை ஆணைக்குழு கண்காணிக்கின்றது
- நிறுவனங்கள், கட்டுப்பாட்டாளர்கள், காவல்துறை, குழந்தைகளுடன் பணிபுரிதல் சோதனை மற்றும் ஆணைக்குழு தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

எந்தவொரு நடத்தையையும் காவல்துறையினருக்கு நிறுவனங்கள் புகாரளிக்க வேண்டும். காவல்துறையினர் சம்பந்தப்பட்டிருந்தால், நிறுவனங்கள் இன்னும் அது தொடர்பில் விசாரிக்க வேண்டும், ஆனால் காவல்துறையினர் ஆரம்பிக்குமாறு கூறிய பின்னரே விசாரணையினைத் தொடர வேண்டும்.

## எந்த வகையான நடத்தை அறிக்கையிடத்தக்கது?

- ஒரு குழந்தை சம்பந்தப்பட்ட பாலியல் குற்றங்கள்
- ஒரு குழந்தை சம்பந்தப்பட்ட பாலியல் முறைகேடு
- ஒரு குழந்தை சம்பந்தப்பட்ட உடல் ரீதியான வன்முறை
- ஒரு குழந்தைக்கு குறிப்பிடத்தக்க உணர்ச்சி அல்லது உளவியல் தீங்கு விளைவிக்கும் ஏதேனுமொரு நடத்தை
- ஒரு குழந்தையை குறிப்பிடத்தக்கவளவு புறக்கணித்தல்.

18 வயதுக்குட்பட்ட எவரையும் ஒரு குழந்தை எனும் பதம் உள்ளடக்கும்.

அறிக்கையிடத்தக்க நடத்தை வகைகளைப் பற்றிய மேலதிக தகவலுக்கு, ஆணைக்குழுவின் அறிக்கையிடத்தக்க நடத்தை திட்டத்தைப் பற்றி எனும் இணையதளத்திற்கு செல்லவும்.

## திட்டம் யாருக்கு பொருந்தும்?

சில நிறுவனங்களில் ஈடுபட்டுள்ள பின்வரும் நபர்களுக்கு இந்த திட்டம் பொருந்தும்:

- ஊழியர்கள்
- தொண்டர்கள்
- சில ஒப்பந்தக்காரர்கள்
- அலுவலர்கள்
- மத குருமார்கள்
- ஒரு மத நிறுவனத்தின் அதிகாரிகள்.

சேர்க்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பற்றிய மேலதிக தகவலுக்கு, ஆணைக்குழுவின் நிறுவனங்களுக்கான எனும் வலைத்தளத்திற்கு செல்லவும்.



03 8601 5281 | contact@ccyp.vic.gov.au | ccyp.vic.gov.au

COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE

## நிறுவனங்களின் கடப்பாடுகள் என்ன?

திட்டத்தின் கீழ் கடப்பாடுகளைச் செய்வதற்கு ஒரு நிறுவனத்தின் தலைவர் சட்டப்படி பொறுப்பேற்கின்றார். ஒரு நிறுவனத்தின் தலைவர் பின்வருபவராக இருக்கலாம்:

- தலைமை நிர்வாக அதிகாரி
- நிறுவனத்தின் முதன்மை அதிகாரி
- செயலாளர், நிறுவனம் ஒரு விக்டோரியன் அரசாங்க திணைக்களமாக இருந்தால்.

நிறுவனத்தில் ஒரு தலைமை நிர்வாக அதிகாரி, முதன்மை அதிகாரி அல்லது அதற்கு சமமானவர்கள் இல்லை என்றால், அவர்கள் ஒருவரை பரிந்துரைக்க முடியும். இதற்கான படிவம் ஆணைக்குழுவின் இணையதளத்தில் ஒரு நிறுவனத்தின் தலைவரை பெயர்குறித்து நியமித்தல் என்று காணப்படும்.

ஒரு நிறுவனத்தின் தலைவர் என்பவர்:

- குழந்தைகளைப் பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
- புகார் அல்லது குற்றச்சாட்டு முன்வைக்க நிறுவனத்திற்கு வழிகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

உங்கள் நிறுவனத்தின் தலைவர் யார் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், உதவிக்கு ஆணைக்குழுவைத் தொடர்பு கொள்ளுங்கள்.

### ஒரு நிறுவனத்தின் தலைவர் என்ன செய்ய வேண்டும்?

| | |
|---|---|
| **அறிவிக்க வேண்டும்** | ஒரு குற்றச்சாட்டை அறிந்த 3 வணிக நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும். |
| **விசாரணை செய்தல் வேண்டும்** | • ஒரு குற்றச்சாட்டை விசாரிக்க வேண்டும்<br>• யார் விசாரணை செய்கின்றார் என்று ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும்<br>• குழந்தைகளுக்கான ஆபத்துகளை நிர்வகிக்க வேண்டும். |
| **இற்றைப்படுத்தல் வேண்டும்** | ஒரு குற்றச்சாட்டை அறிந்த **30 கலண்டர் நாட்களுக்குள்** ஆணைக்குழுவிற்கு விரிவான இற்றைப்படுத்தலை வழங்குதல். |
| **முடிவுகள்** | விசாரணையின் முடிவு என்னவென்றும், நிறுவனம் அடுத்து என்ன செய்யும் என்றும், அது ஏன் அவ்வாறு செய்யும் என்றும் ஆணைக்குழுவிடம் சொல்லுங்கள். |

ஒரு நிறுவனத்தின் தலைவர் **3 வணிக நாள்** மற்றும் **30 கலண்டர் நாள்** அறிவிப்பு விதிகளுக்கு **இணங்காதது ஒரு குற்றவியல் குற்றமாகும்.**

ஒரு நிறுவனத்தின் தலைவரின் பொறுப்புகள் பற்றிய மேலதிக தகவல்களை எங்கள் இணையதளத்தில் காணலாம்.

## உதவி எங்கே பெற்றுக்கொள்ள முடியும்

நீங்கள் ஆணைக்குழுவை பின்வரும் வழிகளில் தொடர்பு கொள்ளலாம்:

- தொலைபேசி: (03) 8601 5281
- மின்னஞ்சல்: contact@ccyp.vic.gov.au

ஆணைக்குழுவின் வலைத்தளமான www.ccyp.vic.gov.au இல் மேலும் தகவல்களை நீங்கள் காணலாம்

உங்களுக்கு ஒரு மொழிபெயர்த்துக் கூறுபவர் தேவைப்பட்டால், மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவையை 13 14 50 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான ஆணைக்குழுவை 03 8601 5281 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேளுங்கள்.